Registered as a News Paper

# மன்னா

MANNA

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 15
தவிப்பு - 03
பக்கங்கள்- 06
விலை ரூபா 20.00
மார்ச் 2011
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2011"

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yahoo.com



## வரலாற்று பெருமை மிகு மாந்தை லூர்து அன்னைத் திருத்தலப் பெருவிழா
## அன்னையின் பதியில் குடும்ப உணர்வில் குழுமி வந்தனர் இறைமக்கள்

**மருதமடு திருச்செபமாலை மாதாவின் முதல் இருப்பிடமாக சரித்திர புகழ் பூத்த மாந்தை லூர்து கெபி திருவிழா 12.02.2011 சனிக்கிழமை சிறப்பாக கொண்டாடப்பட்டது.**

திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் 03.02.2011 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து ஐந்து நாட்கள் திருத்தலத்தில் திருச்செபமாலை செபிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த மூன்று நாள் ஆயத்த திருவழிபாட்டினை முறையே தாழ்வுபாடு, வங்காலை, அடம்பன் பங்கு மக்கள் சிறப்பித்தனர். திருப்பதியின் திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகள் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)





## முருங்கன் மறைக்கோட்ட பகுதிகளை பாதித்த பெருவெள்ளம்
### ஒரு சில நாட்கள் இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கம்






**அண்மைக்காலம் கண்டிராத பெருவெள்ளத்தால் முருங்கன் மறைக்கோட்டத்தின் பல பங்குகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.**

தம்பனைக்குளம், மடுக்கரை, இசமாலைத்தாழ்வு, மருதமடு, அச்சங்குளம், போன்ற கிராமங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன. குஞ்சுக்குளம், அரிப்பு சிலாபத்துறை கிராமங்களுக்கான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தன. கட்டையடம்பன் கற்கிடந்தகுளம், பொன்தீவு கண்டல், வாழ்க்கைப்பெற்றான் கண்டல் போன்ற கிராமங்களுள் வெள்ள நீர் உட்புக கிராமத்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். முருங்கன், நானாட்டான், வங்காலை பாடசாலைகளும் மருதமடு திருத்தலமும் இப்பகுதி வாழ் மக்களுக்கான வெள்ள அனர்த்த இடைத்தங்கல் நிலையங்களாக்கப்பட்டன. இது இவ்வாறிருக்க உயிலங்குளப்பங்கின் பறப்பாங்கண்டல் கிராம மக்களும் மடு மறைக்கோட்டத்தின் ஆட்காட்டிவெளி, அடம்பன் பங்குகளின் பெருந்தொகையான மக்களும் கட்டுக்கரைக் குளத்தின் நீர் மட்ட அதிகரிப்பினால் எந்நேரமும் குளக்கட்டில் உடைப்பேற்பட்டு கிராமங்கள் நீரில் மூழ்கிப்போகலாம் என்ற அபாயத்தால் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மடுத்திருத்தலம், திருக்கேதீஸ்வரம், மற்றும் மன்னார் நகரின் புனித சவேரியார் ஆண்கள், பெண்கள் கல்லூரிகள், சித்திவிநாயகர், அல் அசார் ஆகிய பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டனர். இன்னும் சில மக்கள் ஆட்காட்டிவெளி பங்கின் சவேரியார் ஆலயத்தில் அடைக்கலம் புகந்தனர். கட்டுக்கரைக் குளத்தில் இருந்து வான்வழியே வெளியேறிய நீர் அடம்பன் தாழ்வு கிராமத்தை சூழ்ந்து அம்மக்களின் இயல்பு வாழ்வை பாதித்தது. வெள்ளப் பெருக்கினால் பல்வேறு பகுதிகளில் வாழ்வாதார பயிர்ச்செய்கை பெரிதும் நாசமடைந்து வேளாண்மையை நம்பி இருந்த எம் மக்கள் பலரை கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்க பல பங்குகளின் நல்ல உள்ளங்கள் முன்னெடுத்த சகல பணிகளையும் பாராட்டி நிற்கிறோம்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## அன்ரனிப்பிள்ளை சுவாமி இறைபதம் அடைந்தார்!

மலர்வு
10
07
1917

உதிர்வு
07
02
2011



குருத்துவம்
09.08.1944

மன்னார் மறைமாவட்டத்தில் 25 வருடங்களுக்கு மேலாக ஆன்மீக குருவாக அரும்பணியாற்றிய அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் லூயிஸ் அன்ரனிப்பிள்ளை அ.ம.தி அடிகளார் தனது 94வது வயதில் 07.02.2011 அன்று அமரத்துவமானார். அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி 09.02.2011ல் யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இவ்விரங்கல் திருப்பலியில் மறையுரையாற்றிய அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணி. போல் நட்சத்திரம் அ.ம.தி அவர்கள் "தூய்மையான, ஏழ்மையான, எளிமையான, வறுமையான வாழ்வை வாழ்ந்த இறைபணியாளர் அன்ரனிப்பிள்ளை சுவாமியின் வாழ்வு நமக்கெல்லாம் மேலான படிப்பினை மட்டுமல்ல சவால் விடுக்கும் ஒன்று" என உரைத்தார். அடக்க சடங்கை நிறைவேற்றிய யாழ். ஆயர் அவர்கள், "மன்னார் மறைமாவட்டம் உதயமாகிய வேளை அம்மறைமாவட்டத்தில் ஆன்மீக பணியாற்ற கிடைத்த பொக்கிசம் அன்ரனிப்பிள்ளை சுவாமி" என குறிப்பிட்டார். 'கொம்ச சுவாமி' என பெயரெடுத்த அமரர் அருட்பணி அன்ரனிப்பிள்ளை அ.ம.தி அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட குருக்கள் 11 பேர் கலந்து கொண்டனர். அன்னாரின் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாறுதல் அடைவதாக!

## அருளின் காலம் தவக்காலம்




"மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15)

கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற அழைக்கும் காலமாகிய தவக்காலம் எதிர்வரும் மார்ச் 09ம் திகதி திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகிறது. இத்தவக்காலத்தில் செப, தப நோன்பினூடாக அகப் பயணம் தொடர்வோம். தனிநபர், சமூகத்தின் நல்மாற்றத்தின் கருவிகளாக, கிறிஸ்துவின் சாட்சிகளாக விழித்தெழுவோம்!.

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக்கண்ணுற்ற அருட்சகோதரி மரிய ஜீவந்தி (அ.கா)



அருட்சகோதரி மரிய ஜீவந்தி (அ.கா) அவர்கள் துறவற வாழ்வில் 25 ஆண்டு நிறைவை (2011.01.11) எய்தியுள்ளார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் நானாட்டான் பங்கின் பள்ளங்கோட்டை கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற திரு.திருமதி சு.சந்தாம்பிள்ளை பிலோமினம்மா தம்பதிகளின் மூத்த மகளாக 1960.03.10 அன்று பிறந்தவராவார்.

அருட்சகோதரியவர்கள் தனது ஆரம்பக்கல்வியை மன்/நானாட்டான் மகா வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை யாழ். இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் நிறைவு செய்து இறைவனின் அழைப்பை ஏற்று தனது துறவற வாழ்வை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையுடன் இணைத்து 1986.01.11 அன்று தனது முதல் அர்ப்பணத்தை கொடுத்து தற்போது துறவற அர்ப்பணவாழ்வில் வெளளிவிழாவைக் கண்டுள்ளார். வெள்ளிவிழா நன்றித்திருப்பலி 16.02.2011 அன்று யாழ். கார்மேல் மடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்டம் சார்பான நல் வாழ்த்துக்களை அருட்சகோதரிக்கு 'மன்னா' தெரிவித்து நிற்கின்றது.

## அமலமரித்தியாகிகள் துறவறசபை நிறுவுனர் புனித இயூஜீன் டீ மசனெட்டின் 150வது விண்ணக பிறப்பு விழா

*தகவல் : அருட்பணி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.*



புனித இயூஜீன் டீ மசனெட் பிரான்ஸ் நாட்டின் புறொவான்சின் தலைநகர் ஏக்ஸ் என்ற ஊரில் 1782ல் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து பிரெஞ்சு புரட்சியின் பின்னணியில் புரட்சியில் பூத்த மலராக ஒரு பெரிய வெள்ளியில் மனம் மாறி 1811ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1826ல் திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட அமலமரித்தியாகிகள் சபை, 'ஏழைகளுக்கு நற்செய்தி நவில' என்ற அருங்கொடையின் இலக்கை நோக்கி விரிந்து பரந்து 66 நாடுகளில் 4000 அமலமரித்தியாகிகள் சபை துறவிகளைக் கொண்டு பணியாற்றி வருகின்றது. புனித இயூஜீன் டீ மசனெட் 1861ல் விண்ணகப்பிறப்பை எய்தி 1995ல் புனிதராக திருப்பீடத்தில் உயர்த்தப்பட்டார். இலங்கை தலத் திருச்சபையின் வளர்ச்சிகளுக்கு அமலமரித்தியாகிகளின் பங்களிப்பு பாரியது. புனித இயூஜீன் டீ மசனெட்டின் விண்ணகப்பிறப்பு விழா ஆயத்தங்கள் யாழ் மாகாண அமலமரித்தியாகிகளால் முன்னெடுக்கப்பட்டு வைகாசி 21ம் திகதி 2011ல் நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வாழ்வு புலரட்டும்

எம் மக்களின் சிலுவைகள் தொடர்கின்றன. யுத்தமாய் அழுத்திய சிலுவையின் பாரம் சற்றே இறக்கப்பட்டு ஆசுவாசப்படும் வேளையில் இயற்கையின் சீற்றம், காலநிலை மாற்றம் எம்மை மருளவைத்துள்ளது. விலைவாசி ஏற்றமும் எம்மை எதிர்த்தே நிற்கின்றது. உள்ளூராட்சி தேர்தலின் பேச்சும் வீச்சும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றது. இப்படியாக வாழ்க்கையின் சிலுவைகள் வாடிக்கையாகும் நிலையில் வாழ்வின் அடையாளமாக, பிறருக்கு வாழ்வூட்டும் தியாகத்தின் அடையாளமாக, ஏற்றத்தாழ்வுகளில் மனித மாண்பு இழந்த மக்களின் வாழ்வை மாண்புறச் செய்வதின் அடையாளமாகச் சமூக - பொருளாதார- அரசியல் அநீத அமைப்பை கேள்விக்குட்படுத்தும் அடையாளமாக எல்லோரும் நல்லோராக வாழ இறையாட்சி அமைப்பை அமைக்க உழைப்பதன் அடையாளமாக திகழும் இயேசுவின் சிலுவைப் பயணத்தை, அது கற்றுத் தரும் பாடத்தை மீண்டும் பயில, அதன் வழி நிற்க புலருகின்றது புண்ணிய காலம் - தாவக்காலம் 2011. கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற அழைக்கும் காலம் தான் இத்தவக்காலம்,

## மன்னா
### மனப்பொழிவு
### ஆசிரியர் குழு பகர்வு

மன்னிப்பின் காலம், மனமாற்றத்தின் காலம், அருளின் காலம், தியாகத்தின் காலம், தன்னையே பரிசோதிக்கும் சுய ஆய்வின் காலம் என்று இக்காலத்தை அழைப்பதற்குக் காரணம் பழைய வாழ்வை விட்டு புதுவாழ்வைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். புதுவாழ்வு என்பது தனிநபர் மாற்றத்தில் மட்டும் நிகழாமல் சமூக மாற்றத்திலும் நிகழவேண்டும் என்பதுதான் கிறிஸ்தவ அழைப்பு. தனிநபர் மாற்றத்திற்கும் சமூக மாற்றத்திற்குமான உரமாக்கிகளாக நாம் சந்திக்கும் அல்லது எம்மை சூழும் சிலுவைகள் அமையட்டும். கிறிஸ்தவ வாழ்வில், துன்பத்திற்கு பொருள் உண்டு, புகழ் உண்டு. ஏனென்றால்

இயேசு எம்மை மீட்டது துன்பத்தின் வழியேதான்; சிலுவைப் பாதையிலேதான். சிலுவையைக் கண்டு எள்ளி நகையாடியவர்களும் உண்டு; சிலுவையைக் கண்டு எழுந்து உயர்ந்தவர்களும் உண்டு. சிலுவையைக் கண்டு சரிந்து விழுந்தவர்களும் உண்டு; சிலுவையைக் கண்டு சரித்திரத்தை மாற்றியவர்களும் உண்டு. சிலுவையைக் கண்டு அயர்ந்து அடங்கியவர்களும் உண்டு; சிலுவையைக் கண்டு கிளர்ந்து சாதித்தவர்களும் உண்டு. வருவது வரட்டும்; வரும் சிரமங்கள் வரட்டும். இறைநம்பிக்கையில் எதிர் கொள்வோம். அற்ப சலுகைகளுக்காக விலை போகும் மனிதர்களிடமிருந்து நாம் வித்தியாசமாக வாழுவோம். இன்றைய இருளின் சக்திகளின் சேவகர்களாகவும் சின்னங்களாகவும் மாறி விடாதிருக்க மனவுறுதி கொள்வோம். திருமறையும், மண்ணும், மண் சுமக்கும் நம் மக்களும் மாண்புற முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் முழுமூச்சுடன் இணைவோம். இம் முயற்சி தரும் சிலுவைகளை மானசீகமாய் சுமந்து அகவிடுதலை, ஆன்மீக விடுதலை, முழு மனித விடுதலை எனும் உயரிய கல்வாரி நோக்கி கால் நடையிடுவோம். மாற்றங்களையும், ஏற்றங்களையும், முன்னேற்றங்களையும் முடக்கிவிடும் காலமாய் இத்தவக்காலம் நமக்கு அமைவதாக!

# மன்னா நிர்வாகத்திடமிருந்து....

### *வாசக நேயர்களே, பொறுத்தருள்க!*

எம் மறைமாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ள அனர்த்தம் 'மன்னா' பத்திரிகையின் அச்சுப்பதிப்பு மற்றும் விநியோக பணியை பாதித்திருந்தது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே இம்மாத இதழ் பக்க குறைப்புடன் அனைத்து பக்கங்களுமே கறுப்பு, வெள்ளை நிறத்தை கொண்டே வெளிவருவதுடன் பெப்ரவரி மாத இதழும் இம் மாதத்துடன் இணைத்தே உங்களுக்கு வழங்கப்படுகின்றது. மார்ச் மாத பத்திரிகை ஒன்றின் **விலை 20/=** என்பதையும் கவனத்தில் கொள்ளவும். இதனிமித்தம் வாசக நேயர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை பெருமனதோடு பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

### *குறுக்கெழுத்து, மறையறிவு போட்டிகள்*

இம்மாதம் குறுக்கெழுத்து, மறையறிவுப் போட்டிகள் இடம் பெறவில்லை. பெப்ரவரி மாத போட்டிகளின் முடிவுகள் வந்து சேரும் முடிவுத்திகதி 10.04.2011 ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது. என்பதை அறியத்தருகின்றோம்.

### *பாஸ்குகால சிறப்புப் பொழிவு*

அடுத்த இதழ் (ஏப்ரல் வெளியீடு) கிறிஸ்து உயிர்ப்பு சிறப்புப் பொழிவாக, பக்க அதிகரிப்புடன் மலர உள்ளது. பாஸ்குகால சிறப்பு கட்டுரைகள், கவிதைகள், ஆக்கங்களை காலதாமதமின்றி உடனடியாக அனுப்பிவையுங்கள்.

### *பணி ஓய்வு, பணி ஏற்பு*

மன்னா பத்திரிகையின் கணனிப்பிரிவில் கடந்த மூன்றாண்டுகள் ஆர்வமாய் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ள திருமதி. J. தட்சாயினி(கீத்தா) அவர்களுக்கு நன்றிகள் பல பல.

எம் பத்திரிகையின் கணக்காளராக பணி ஏற்றிருக்கும் செல்வி.அ.டெவ்லின் அவர்களையும் கணனிப்பணியை ஏற்றிருக்கும் செல்வி.மி.ஆன் சுஷாந்தினி அவர்களையும் மகிழ்வோடு வரவேற்கின்றோம்.

*"மன்னாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருங்கள். வாசகர் நேயர் வட்டத்தினை விஸ்தரிக்க ஒத்துழையுங்கள். நல்லாலோசனைகளை அறிவியுங்கள், இது உங்கள் பத்திரிகை என உணர்வு கொள்ளுங்கள்."*

# மாறவே ஆசைப்படுகின்றேன்

பி. கிறிஸ்பி குரூஸ், பேசாலை.

"நான் மாறவே ஆசைப்படுகின்றேன்." ஆசையிருந்தால் மட்டும் போதுமா? அதற்கான செயற்பாடு வேண்டாமா?... யேசு ஆண்டவரின் மரணப்பாடுகளில் உள்ளங்களை தோய்த்தெடுத்து அவரோடு ஒன்றிக்க முனையும் காலம்தான் தவக்காலம். மனம்மாற நம்மை அழைக்கிறது இக் காலம். இது, இறை அருளின் காலம். நடந்து வந்த பாத அடிச்சுவடுகளில் படிந்திருக்கும் பாவ அழுக்குகளை கல்லறைக்குள் அடக்கி விட, நம்மையே மீளாய்வு செய்கின்ற காலம். மனம் மாற ஆசையிருந்தால் மனமாற்றத்துக்குரிய உண்மை நிலையை அறிந்து அதன் படி வாழ்வை நடத்திச் செல்ல முனைய வேண்டும்.

### நம்பிக்கை உணர்வோடு அகப் பயணமாகுதல்

"மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்" (லூக் 13:5). மனமாற்றம் பெற தியானம் அவசியம். தியானம் என்றால் - ஓர் அகப் பயண அனுபவம். ஒருவர் தனக்குள்ளே பயணமாகி தன்னிலை அறிவதே மனமாற்றத்தின் முதற் படி. மனம் பாவத்தால் நிறைந்திருக்கும் போது ஒருவரால் அகப் பயணம் புரிவது கடினமே. பாவம் களையப்பட்டாலே அகத்திலே ஆண்டவனை அனுபவிக்க முடியும். பாவத்தை அகற்றுவது இலகுவான காரியமல்ல, அதற்கு ஆண்டவரின் அருள் தேவை. முதலில் மனமாற்றம் இறைவனால் அருளப்படும் ஒரு கொடை. இரண்டாவது மனமாற்றம் தனக்குள்ளே நிகழும் மாற்றம். மூன்றாவது இதற்கு முழு முயற்சி தேவை. மனமாற்றம் அடைய விருப்பம், ஆசை இருக்கிறது. ஆனால் அதற்கான தொடர் முயற்சியை பலபேர் செய்வதில்லை. அதற்கு சில, பல தடைகள் வேலி போட்டுவிடுகின்றன. எனவே மனதில் மாற்றமில்லை. பகை உணர்வு, மனமாற்றத்திற்கான பெரும் தடையாக காணப்படுகிறது. இது தொடக்க காலத்தில் இருந்தே இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்ற ஓர் அரக்கன். மனமாற்ற வழிமுறைக்கான இன்னுமொரு தடையாக இருப்பது நல்ல எண்ணம் இல்லாமை. இப்படியாக பல்வேறு தடைகள் மனமாற்றப் பாதையிலிருந்து ஒருவரை விலக்கி வைக்கிறது. "இறைப்பற்றின்றி இருக்க யாருக்கும் ஆண்டவர் கட்டளையிட்டதில்லை. பாவம் செய்ய எவருக்கும் அவர் அனுமதி கொடுத்ததும் இல்லை"(சீராக் 15:20). மனமாற்றத்துக்கு குறுக்கு வழி தேவையில்லை. ஒருவர் தனது சொந்த வல்லமையை விட மேலான இறை வல்லமையை நம்ப வேண்டும். அதை தேட வேண்டும். இறைவனின் அருள் இல்லாமல் மனிதன் தன்னில் மனமாற்றம் பெறமுடியாது. "இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்கிறார் ஆண்டவர். மனமாற்றம் விசுவாசத்தோடு நடை பெறும் செயலாக இருக்க வேண்டும்.

### மனம் மாற வேண்டும் என்ற உள்ளார்ந்த மனநிலை

மனமாற்றம் கஷ்டமான, கசப்பான, களைப்பான பயணம். "இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். 'மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத்தேர்ந்து தெளிவீர்கள்"



(உரோ 12:2). மனம் மாற வேண்டும் என்ற மேலார்ந்த மனநிலை அல்ல. மாறாக உள்ளார்ந்த உறுதிப்பாட்டிற்கு இடமளித்தல் வேண்டும். அப்போது உடல், உணர்வு, சிந்தனை, உறவிலே தானாக மாற்றம் ஏற்படும். இறை விருப்பம் தன்னில் நிறைவேற ஒருவர் தன்னை உடைக்கின்ற போது மனமாற்றத்தின் மகிழ்ச்சியை அனுபவிப்பார். ஒப்புரவாதலே உண்மை மனமாற்றத்தின் வெளிப்பாடாக அமைகிறது. "நீங்கள் உங்கள் காணிக்கையை பலிப்பீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்"(மத் 5:23- 24).

### மனமாற்றத்தின் மையம் கிறிஸ்து

ஒருவரின் தனிப்பட்ட வாழ்வில், கிறிஸ்தவ குழுமவாழ்வில், அப்போஸ்தலிக்க வாழ்வில் கிறிஸ்துவே மையமாக இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி நகர்ந்து செல்ல அழைக்கும் தலத்திருச்சபையின் அழைப்பை வாழ்வாக்க கிறிஸ்துவையே மையமாகக் கொள்வோம். கிறிஸ்துவே நற்செய்தி, கிறிஸ்து அனுபவமே மனமாற்ற அனுபவம், கிறிஸ்துவை தொடுதலும் கிறிஸ்துவால் தொடப்படுதலுமே அற்புதமான வல்ல செயலாக, மனமாற்றமாக பரிணமிக்கின்றது.

கிறிஸ்துவின் மார்பில் சாய்ந்து கொள்வோம். அதுதான் கிறிஸ்தவனின் மகிழ்ச்சி. என் துணை, என் வாழ்வு, என் மகிழ்ச்சி கிறிஸ்துதான். "என்னை அன்பு செய்யாதவன் என் சீடனாக இருக்க முடியாது" (மத் 11:28). நல்ல மேய்ப்பனாம், இயேசுவின் தோளில் சாய்ந்திருக்கின்ற அனுபவம், உறவு நமக்கு வேண்டும்.

எனவே ஆண்டவர் அருளில் நம்பிக்கை கொண்டு எமக்குள்ளே அகப் பயணத்தை தொடர்ந்து, மாறவே ஆசைப்படுகின்றேன் என்ற உள்ளார்ந்த உறுதியோடு கிறிஸ்து மைய அனுபவமுடைய மனமாற்றம் பெறுவோம். அதற்கு இத்தவக்காலம் எமக்கு பயனுடையதாவதாக!

# சாம்பல் திலகமிட்டு

அருட்பணி. ஜெறி



திருநீற்றுத் (சாம்பல்) திலகமிட்டு தியாகக் காலத்தை ஆரம்பஞ் செய்து, இரத்தத்தைத் திலகமிட்டு தியாகக் காலத்தை நிறைவு செய்கிறோம்.

அடிமைச் சக்திகள் அனைத்தையும் சுட்டெரித்துப் பொசுக்கி, சாம்பலாக்கிவிட்டு, அர்ச்சிக்கப்பட்ட விடுதலை மக்களாக வெளிச்சத்திற்கு வருகின்றோம்.

இருளைப் புறக்கணித்துவிட்டு, பாஸ்கா ஒளியில் புதுவார்ப்பு மேற்கொள்கிறோம். இத்தகையத் திருயாத்திரையின் காலமாக திருநீற்றுப் புதன் முதல், உயிர்ப்பின் ஞாயிறு வரையுள்ள தினங்கள் சிறப்புப் பெறுகின்றன.

➢ இடைப்பட்ட நாற்பது தினங்கள், யோர்தான் ஆற்றில், யோவானிடம் திருமுழுக்குப் பெற்ற பிறகு, பாலைவனத்தில் இயேசு மேற்கொண்ட நாற்பது தினங்களைச் சுட்டிக்காட்டி அமைகிறது (மத். 4:2; லூக் 4:1-2, மாற்கு 1:12-13).

➢ சீனாய் மலையில் மோசே நாற்பது பகலும், நாற்பது இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்போது அவர் அப்பம் உண்ணவும் இல்லை. தண்ணீர் பருகவும் இல்லை. உடன்படிக்கையின் வார்த்தைகளாக பத்துக் கட்டளைகளை பலகையின் மேல் எழுதினார் (விடுதலைப் பயணம் 34:28).

➢ எலியா உணவினால் வலிமை அடைந்து நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து, ஓரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார் (1 அரசர்கள் 19:8).

➢ "கொராசின் நகரே, ஐயோ! உனக்குக் கேடு பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்கு கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பார்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளில் (மத் 11:21) தெரியவருவது போல தியாகக் காலத்தில் தனிப்பட்ட பரிகார அடையாள உடையினை அணிந்துகொண்டனர். சாம்பல் தெளித்துக் கொண்டனர்.

➢ வரலாற்றில் மலர்ந்த அனைத்து மதங்களிலுமே, தபசுகளும், செபங்களும், ஒறுத்தல்களும் உபவாசங்களும் ஒரு முக்கியமான இடத்தை வகித்திருக்கின்றன. அவைகளின் வழியாக மனிதர்கள் இறைமையைச் சுவைத்து உணர முற்பட்டிருக்கின்றார்கள்.

➢ தபசுகளின் மூலம் தங்கள் புலன்களை அடக்குவதன் வழியாக, தங்களையும் கடந்த ஒரு பராசக்தியை அனுபவிக்க விழைந்திருக்கின்றார்கள். மேலும், தபசுகளின் போது தங்களின் உடலனைத்துமே பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதாக அறிந்திருக்கின்றார்கள். தங்களின் வெறுமையின் வடிவாக சாம்பல் போன்றதை அடையாளமாகக் கண்டிருக்கின்றார்கள்.

➢ 11-ஆம் நூற்றாண்டில்தான், சாம்பல் அர்ச்சிப்புக்கான சிறப்புச் செபமும், வெளிப்படையாக கனமான பாவங்களை அறிக்கை செய்பவர்களுக்கு மட்டுமில்லாது, குருக்கள் பொதுநிலையினர் என அனைவரின் நெற்றியிலும் சாம்பலை சிலுவை வடிவிலே திலகமிடும் வழக்கமும் திருச்சபைதோறும் பழக்கத்திற்கு வந்தது.

➢ 12-ஆம் நூற்றாண்டில், இதன் வளர்ச்சியாக, முன்னைய ஆண்டுகளிலே அர்ச்சிக்கப்பட்ட குருத்தோலைகளைச் சுட்டெரித்ததன் மூலம் கிடைக்கும் சாம்பலைப் பயன்படுத்தும் முறை வளரலாயிற்று.

➢ அதாவது, திருநீற்றுப் புதன் முதற்கொண்டு, புனித வாரத்தை எதிர்நோக்கியதாக தியாகக்காலம் அமைய வேண்டுமென அரிய அம்சத்தின் எளிய வெளிப்பாடாக இம்முறை வழக்கத்திற்கு வந்தது.

"நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால், அதற்குத் திரும்பும்வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, உன் உணவை உண்பாய் நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்"

என்னும் தொடக்க நூலில் (3:19) முதல் மனிதருக்கு இறைவன் தந்த தீர்ப்பு திருநீற்றுப் புதன் அன்று எடுத்துச் சொல்லப்படுகிறது.

➢ மாற்றங்களின்றி ஏற்றங்கள் இல்லை! முன்னேற்றங்களை விளைச்சல் செய்யுமெனில், வரட்டும் தியாகக்காலம். அது முற்போக்குகளை முடக்கிவிடுமெனில், வரவேற்கப்பட வேண்டிய திருக்காலம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கத்தோலிக்கத்தின் தொன்மைச் சின்னங்கள்

## மாந்தை திருமுழுக்குத் தொட்டியும், நற்கருணை கிறாதியும் மடு அன்னையின் திருச்சுரூபமும்

அருட்தந்தை. அருள்பிரகாசம் ம.க.

### முன்னுரை

இலங்கைத்தீவில் மிகத்தொன்மை வாய்ந்த பிரசித்தி பெற்ற நகரம் மாதோட்டத்தின் சர்வதேச துறைமுகமாக விளங்கியது மாந்தை நகரமாகும். மன்னார்த்தீவில் மறைசாட்சிகள் மரிப்பதற்கு முன்னரே இலங்கையின் முதல் மறைபரப்பாளர்கள் என அறியப்பட்ட பிரான்சிஸ்கன் சபைக்குருக்கள் நம் நாட்டில் பல்வேறு இடங்களில் கத்தோலிக்க மறையைப் பரப்பினர். இச்சபைக் குருக்கள் 1542ம் ஆண்டு மாதோட்டத்தில் பல சிலை வழிபாட்டுக்காரரை மனமாற்றி கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்த்துள்ளனர். 1544ல் மன்னார்த் தீவில் வேதசாட்சிகளாய் மரித்தவர்களைத் தவிர ஏனையோர் மாதோட்டத்திற்கு வந்து பிரான்சிஸ்கன் சபையினரின் கண்காணிப்பில் வாழ்ந்தனர். அருட்தந்தை மசேயிற் அ.ம.தி அடிகளார் 1886ல் மடுவிலுள்ள "கோடெக்ஸ்" என்ற குறிப்பேட்டில் மருதமடு மாதாவின் ஆரம்ப இருப்பிடம் மாந்தை என பரம்பரையாக பேசப்பட்டு வருகிறது என குறிப்பிட்டுள்ளார். குவாறஸ் எனும் போத்துக்கேய வரலாற்று அறிஞரின் கருத்துப்படி பேதுரு.டி.பென்ரக்கன் எனும் குருவானவரால் 1614ம் ஆண்டு மாந்தையிலே ஆரோக்கிய அன்னைக்கென்று ஓர் ஆலயம் கட்டப்பட்டது என வெளிப்படுத்தியுள்ளார். இப்பின்னணியில் மாந்தை திருமுழுக்குத் தொட்டியையும், மாந்தை ஆலய பீடத்தின் முன்னிருந்த நற்கருணைக் கிறாதியையும் மடு அன்னையின் திருச்சுரூபத்தையும் பற்றிய தொன்மையை அறிந்து கொள்ளலாம்.


### மாந்தை திருமுழுக்குத் தொட்டி



மாந்தை துறைமுகத்திற்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட தொன்மை வாய்ந்த திருமுழுக்குத் தொட்டி தற்போது வவுனியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொட்டி கேரளாவில் உள்ள சிரியன் மரபு மீறாத திருச்சபைக் கோவிலில் காணப்படும் திருமுழுக்குத் தொட்டியை ஒத்ததான அமைப்பைக் கொண்டது. தொட்டியின் வெளிச் சுற்றளவு 330செ.மீ., ஆழம் 132 செ.மீ. இதன் தடிப்பு அண்ணளவாக 12.7செ.மீ எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது பெரும் கனமானதாக காணப்படுவதால் ஒரே இடத்தில் செதுக்கப்பட்டிருக்கலாம் எனவும் அனுராதபுரக்காலம் எனக் குறிப்பிடப்படும் காலத்தின் முன் கூற்றுக் காலப்பகுதியைச் சேர்ந்ததாகவும் கருதலாம் என தொல்லியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (கிருபானந்தன்: 2007:93).

### மாந்தை நற்கருணைக் கிறாதி

மாந்தை ஆரோக்கிய அன்னை ஆலயம் 1670ல் ஒல்லாந்தர் கைவசமானது. அவர்கள் இவ்வாலயத்தை தமக்குரிய கூட்டங்களை நடாத்தும் மண்டபமாக பாவித்துள்ளனர். 1834ல் காசிச்செட்டி என்பவர் மாந்தையில் இடிபட்ட ஆலயப்பகுதிகள் இருந்ததாக தனது "சிலோன் கசற்றி" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்திலே பீடத்திற்கு முன்பகுதியில் இருக்கும் நற்கருணைக் கிறாதியையும் ஒரு சிறிய மாதா சுரூபத்தையும் பி.டபிள்யூ.டி கண்காணிப்பாளர்கள் கண்டு அதைப் பயபக்தியோடு பேணிப் பாதுகாத்து வந்தனர். (அன்ரனைனஸ்: 1956 :1979:5 - 7)



இப்போது அந்த நற்கருணைகிறாதியோடு இணைந்ததாக லூர்து கெபி ஒன்றை 1949ல் அருட்தந்தை ஜெ.சிங்கராயர் அடிகளார் அப்போதைய ஆயர் கியோமர் ஆண்டகையின் வழிநடத்தலில் கட்டியெழுப்பியுள்ளார். இக் கெபியானது 30 வருட போராட்ட காலங்களில் காப்பாற்றப்பட்டு இன்றுவரை நம் முன்னோரின் விசுவாசத்தை வெளிக்காட்டும் தொன்மைச் சின்னமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

### மடு அன்னையின் திருச்சுரூபம்



யாழ் அரசன் மன்னார்த்தீவின் புதிய கிறிஸ்தவர்களை அரசியல் காரணங்களுக்காக கொலை செய்ய படையுடன் வந்த போது மாந்தையில் இருந்த மாதா சுருபத்தை சில பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும் மாந்தை மக்களும் முதல்தடவையாக இடம் பெயர்ந்து மடுவிற்கு எடுத்துச் சென்றுள்ளனர் எனும் பல்டேயுஸ் பாதிரியாரின் குறிப்பை ஆதாரங்காட்டி 1894ல் ஜே.பி.லிவிஸ் என்பவர் தனது "மனுவல் ஒவ் வன்னி" எனும் நூலில் 254ம் பக்கத்தில் கூறியுள்ளார். இக்கருத்தையும் "மாந்தை மாதாவே மடுமாதா" எனும் மாதோட்ட மக்களின் ஏகோபித்த தொனிக் குரலையும் ஆதாரமாகக் கொண்டு மன்னார்த்தீவு கிறிஸ்தவர்கள் மரிப்பதற்கு முன்னரே மடு அன்னை சுருபம் மாந்தை ஆலயத்தில் இருந்துள்ளது. எனவே மடு அன்னை சுருபமும் நம் கத்தோலிக்கத்தின் தொன்மையை வெளிப்படுத்தும் மிக முக்கிய சான்றாதாரங்களில் ஒன்றாகும்.

### உசாத்துணை நூல்கள்

1. "திருச்சபை வரலாற்றுத் துளிகள்" - பிரசுரித்தவர் அருட்தந்தை சா.பி.கிருபானந்தன், 2007.
2. "The Chronicle of the sanctuary of Our Lady of Madhu" by fr.A.J.B.Anloninus omi, (1956-1979).

# எட்டு முறை அமைதியில் புனித யோசேப்பு

## மார்ச் 19

ச.வில்பிரெட், மாளிகைப்பிட்டி, அளவக்கை



அகிலம் இன்று ஆடம்பரங்களிலும், ஆரவாரங்களிலும், ஆர்ப்பரிப்புகளிலும், அடாவடித்தனத்திலும் அல்லோலகல்லோலப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறது. உலகில் அமைதி இல்லை.

அணுசக்திகளின் அறை கூவல், நவீன ஆயுதங்களின் அச்சம், போர், பூசல், புரட்சி, போட்டி மனப்பான்மை, நாட்டை நாடு ஏற்றுக் கொள்ளாமை, யார் பெரியவன் என்ற போட்டி மனப்பாங்கு, மனிதம் மனிதத்தை மதிக்காமை, ஆழ்மன அன்பில்லாமை, இவை அமைதிக்கு (சமாதானத்திற்கு) அச்சுறுத்தலாகும்.

நாட்டில் அமைதி இல்லை. வீட்டில் அமைதியில்லை. ஏன் உள்ளத்திலும் அமைதியில்லை. அமைதி! அமைதி! இறைவன் தான் அமைதி, இறைவன் தருவது தான் அமைதி. அமைதியில் இறைவன் பேசுகிறார். அமைதியில் மோசேயோடு பேசினார், அமைதியில் சாமுவேலோடு பேசினார், இன்னும் அமைதியில் வாழ்ந்த ஆன்மீக வாதிகளோடு பேசினார், ஞானிகளோடு பேசினார், யோகிகளோடு பேசினார். அமைதி என்பது கண்டதையும் நினையாமல் இருத்தல், வாயில் வந்ததை எல்லாம் பேசாமல் இருத்தல், எதையும் எதிர் பாராமல் இருத்தல்.

இத்தனை அம்சங்களும் ஒருங்கே அமைந்து எட்டு முறை அமைதியாக பேசாதிருந்த விவிலிய கதாபாத்திரமே புனித யோசேப்பு.

1. திருமண ஒப்பந்தம் மட்டுமே ஆகியிருந்த கன்னி கருத்தாங்கினாள்; அறிந்தார்; அமைதி காத்தார்; ஏற்றுக் கொண்டார். ஆனால் பேசவில்லை. (மத் 1 : 18 - 25)

2. இறைமகன் பிறக்க இடமில்லை, தங்க வீடில்லை, மக்கள் இருந்தனர், இடம்தான் இல்லை, மனம் இறுகி இருந்தது. இறுகிய மனதில் இடம் இருக்கவில்லை. யோசேப்பு பேசவில்லை . (லூக் 2 : 7)

3. குழந்தை யேசு பிறந்த போது, வானதூதர் பண் இசைத்தனர், இடையர் கூட்டம் ஆராதித்தனர், ஞானிகள் காணிக்கை செலுத்தி வணங்கினர். யோசேப்பு மகிழ்ந்தார் ஆனால் பேசவில்லை. (லூக் 2 : 8 - 20)

4. எருசலேம் தேவாலயத்தில் குழந்தை யேசுவை காணிக்கை ஆக்கினர். இரு மாடப்புறாக்களை கையளித்தனர். முதியோர் சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்தி ஆண்டவரை புகழ்ந்தார். அது கண்டும் யோசேப்பு பேசவில்லை. (லூக் 2 : 22 - 38)

5. குழந்தை இயேசுவைக் கொல்ல ஏரோது மன்னன் கட்டளையிடுகிறான். " எகிப்திற்கு தப்பி ஓடிச்செல்லும்" என்ற வான தூதன் செய்திகேட்டார். உடன் பட்டார். இரவோடு இரவாக புறப்பட்டார். அதிலும் பேசவில்லை. (மத் 2 : 13 - 15)

6. எகிப்தில் வானவன் குரல் மீண்டும் ஒலித்தது; "நீர் எழுந்து இஸ்ராயேல் நாட்டிற்கு செல்லும்", பணிந்தார், எழுந்தார், விரைந்தார். ஆனால் பேசவில்லை. (மத் 2 : 19 - 21)

7. பெரிய ஏரோது இறந்ததும், மகன் அர்க்கெலா யூதேயாவின் அரசன் ஆனான். அவன் கொடியவன். கனவில் மீண்டும் தூதன் குரல், எச்சரிக்கப்படுகிறார். யோசேப்பு கலங்கவில்லை, மயங்கவில்லை, பேசவும் இல்லை. யூதேயா செல்லாமல் கலிலேயா சென்று (நசரேத்தில்) குடியிருந்தார். (மத் 2 : 22 - 23)

8. இயேசுவுக்கு வயது பன்னிரெண்டு - திருக்குடும்பம் பாஸ்கா விழாவுக்கு எருசலேம் சென்றது. விழா முடிந்ததும் இயேசு ஆலயத்தில் தங்கி விட்டார். மரியாளும் யோசேப்பும் தேடிக் கண்டடைந்தனர். தாய் பேசினார்: "மகனே... உம் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே", மகனின் பதில்!; "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள். நான் தந்தையின் அலுவல்களில் ஈடுபடவேண்டும்"
அப்போதும் யோசேப்பு பேசவில்லை. அமைதி காத்தார். (லூக் 2 : 41 - 50)

நீதிமான், நேர்மையாளர் கண்டதையும் பேசமாட்டார். எட்டு நிகழ்வுகளின் போதும் பேசாது அமைதிகாத்த அண்ணல் தான் புனித யோசேப்பு. இவர் நமக்குத் தரும் செய்தி "இயேசுவின் தாய் அன்னை மரியாள் ஆண்டவரின் அடிமை, நான் அமைதிக்கு அடிமை. என்னைப் போல் எச்சந்தர்ப்பத்திலும் அமைதியாக வாழுங்கள்" என்பதே.

தாயின் கருவறையில் அமைதியில் வளர்ந்தோம், பிறந்தோம், இறப்பில். கல்லறையில் அமைதியில் உறங்குகின்றோம். தொடக்கமும் அமைதி, முடிவும் அமைதி. அமைதி! அமைதி!.

**அமைதியில் வாழ்ந்தால் அமைதியில் இறைவன் நம்மோடு பேசுவார்.**

1ம் பக்கத் தொடர்ச்சி..........

## முருங்கன் மறைக்கோட்ட பகுதிகளை பாதித்த வெள்ளம்..........

செட்டிகுளப் பங்கின் சில பகுதிகளும் வவுனியாவின் சில பகுதிகளும் வெள்ளப் பெருக்கினால் பாதிப்புக்குள்ளாகின.

நாட்டின் பல பகுதிகள் அடை மழைகாரணமாக பெருவெள்ள அனர்த்தத்தை சந்தித்துள்ளன. 1958ம் ஆண்டிற்கு பிற்பாடு மன்னார் பகுதிகளில் இம்முறையே இப்படியான பெரு வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என முதியவர்கள் கருத்துரைக்கின்றனர். மன்னார் பிரதேசம் பெரிதாக அடைமழையை கண்டிராத போதிலும் அனுராதபுர பகுதியின் குளங்கள், நீர்த்தேக்கங்கள் நிரம்பி வெளியேற்றப்பட்ட தண்ணீரின் நகர்வே இப்பகுதியை வெள்ளக்காடாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

# முத்தசாப்த நிறைவில்..........

திரு. ச.மாட்டின் டயஸ்
பேசாலை

"உன் இளமை கழுகின் இளமையெனப் புதிதாய் பொலிவு பெறும்" (தி.பா 103:05)

இம்மேற்கோளை உள்ளத்தில் தாங்கி 500இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் 2011.01.29ந் திகதி ஒன்று கூடினர்.

இந்நாள் நமது மன்னார் மறைமாவட்ட உதயத்தின் 30 ஆண்டுகள் நிறைவு நாளாகும். அத்தோடு இவ்வாண்டு நமது மறைமாவட்ட ஐந்தாண்டு மேய்ப்புப்பணித் திட்டத்தின் நிறைவாண்டும் இளைஞர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டுமாகும். நம்மறைமாவட்டத்தின் ஒவ்வொரு இளைஞனையும் யுவதியையும் "கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு" என இவ்வாண்டு அழைத்து நிற்கின்றது. இந்நாள் (29.01.2011) அதிகாலை ஐந்து மணியிலிருந்து தோட்டவெளி வேதசாட்சிகளின் ஆலயம் களைகட்ட ஆரம்பித்து விட்டது. பல வண்ணக் கொடிகள் இளங் காலைக் காற்றில் அசைந்தாடி வரவேற்க எண்திசைகளிலிருந்தும் மக்கள் சாரை சாரையாக ஆலயத்தை நோக்கி வந்தடைந்த வண்ணமாயிருந்தனர். பல்லின ஊர்திகள் பல, வீதியின் இரு மருங்கும் அணிவகுத்து நின்றன. இளம் பரிதியின் வெப்பக் கதகதப்பில் விழித்துக் கொண்ட சிட்டுக்களும் சிறுபறவைகளும் சிறகடித்துக் கீதமிசைத்தன. வேப்பஞ் சோலையில் சுகம்கண்ட பனிமூட்டம் ஆதவக்கதிர்களின் தழுவலில் ஐக்கியமாகியது. பூமித்தாயும் சிலிர்த்துக் கொண்டு துயிலெழுந்தாள்.

காலை 7.30மணி இளைஞர்கள் கரங்களில் கொடிகள் ஏந்தி அரங்கில் அணிவகுத்து நின்றனர். அவர்களைத் தொடர்ந்து பங்குப் பிரதிநிதிகள் 40க்கும் மேற்பட்ட குருக்கள் தலைமை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுடன் தயார்நிலையில் நின்றனர். "புதுயுகம் புலர்ந்தது புது இனம் மலர்ந்தது" என்று கீதமிசைக்கப்பட அணிவகுப்பு மேடையை நோக்கி நகர்ந்தது. மேடைக்கு அருகில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பங்களில் திருத்தந்தையின் கொடி ஆயர் அவர்களினாலும் பங்குக் கொடி பங்குத் தந்தையினாலும் இளைஞர்அணியின் கொடி இளைஞர் தலைவரினாலும் ஏற்றப்பட்ட பின் குத்துவிளக்கின் திரிகளும் ஏற்றி வைக்கப்பட்டன. திரியை ஏற்றுவதில் [illegible] அதிபரும் பங்கு [illegible].

மைதானம் மக்கள் திரளினால் நிறைந்திருந்தது. பல்வேறு துறவற சபைகளைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட அருட்சகோதரிகள் திருப்பலி மேடையின் வலது புறத்தில் குழுமியிருந்தனர். 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இளம் பெண்கள் மேடையின் இடப்புறம் திரண்டிருந்தனர். அரச பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள், பங்குப்பிரதிநிதிகள், அழைக்கப்பட்டவர்கள் மேடையின் முன்னாலும் மக்கள் மேடையின் முப்பக்கங்களிலும் அருள்வேண்டி, இறையாசீர் வேண்டி அமர்ந்திருந்தனர். குருமுதல்வர் அவர்கள் வாழ்த்துக் கூறி வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மறைமாவட்டதின் மூத்த குருமணிகள் அருட்தந்தை சேவியர் குருஸ் அடிகளார் (மடுமாதா சிறிய குருமட அதிபர்) அருட்தந்தை J. B. தேவராஜா அடிகளார், அமலமரித்தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி போல் நட்சேத்திரம் அடிகளார் ஆகியோருடன் ஏனைய குருக்களும் இணைந்து கொண்டனர்.

ஆயர் அவர்கள் தம் முன்னுரையில், "தமது விசுவாசத்துக்காக இரத்தம் சிந்தி தமது உயிரை ஈந்த வேதசாட்சிகளின் புனித பூமியில் நாம் நின்று பலிசெலுத்திக் கொண்டிருக்கின்றோம். விசுவாசம் உயிரைவிட மேலானது என்பதை நமது முன்னோர்கள் நிரூபித்திருக்கின்றார்கள். நாமும் அவர்கள் வழியில் வாழ்வோம்" எனக்குறிப்பிட்டார்கள்.

மறையுரையில் "இளைஞர் உருவாக்கத்தில் குடும்பங்கள் சிறந்த தளங்களாக இருந்து பணியாற்ற வேண்டும். அதற்குக் குடும்பங்களிலே அன்பு, ஒற்றுமை, அர்ப்பணிப்பு ஆகிய கிறிஸ்தவ விழுமியங்கள் நிறைந்திருக்க வேண்டும். இளைஞர்கள் அனைவரும் அன்பிய வாழ்வுக்குள் கூட்டுச் சேரவேண்டும். அதில் பகிர்ந்து வாழும் பண்பை வளர்த்து கொள்ள வேண்டும்" எனக்குறிப்பிட்டார்கள்.

வேதசாட்சிகள் இராக்கினி திருச்சுரூப ஆசீரோடு திருவிழாத் திருப்பலி நிறைவுற்றது.

இதனைத் தொடர்ந்து இளைஞர் ஆணைக்குழு இயக்குனராயிருந்த அருட்தந்தை P. ஜேசுராஜா அவர்களினால் கடந்த மூன்று ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் அறிக்கை நூல் ஆயருக்கும் அரச அதிபருக்கும் குருமுதல்வருக்கும் வைபவரீதியாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட / பங்குத்தளச் செய்திகள்

## யோசப்வாஸ் நகரில் அருளாளர் யோசப்வாசின் திருச்சுரூபம்

தகவல் P. இராயப்பு

அருளாளர் யோசப்வாசின் 300வது விண்ணகப் பிறப்பு விழா இலங்கைத் திருச்சபை முழுவதிலும் மகிழ்வாகக் கொண்டாடப்பட்ட வேளையிலே மன்னார் வேதசாட்சிகளின் புனித பூமி தோட்டவெளிப்பங்கின். யோசப்வாஸ் நகரில் கடந்த 16.01.2011 அன்று அருளாளரின் திருச்சுரூபம் பங்குத்தந்தை அருட்பணி.பி.ஞானராஜ் குருஸ் (நேரு) அடிகளாரினால் திரை நீக்கம் செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்விற்கும் வித்திட்ட அருளாளரின் திருச்சுரூபம் இப்பகுதியில் நிறுவப்பட்டதையிட்டு இப்பகுதிவாழ் மக்கள் பெருமகிழ்வடைந்துள்ளனர்.

## தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்ரியார் ஆலய திருவிழா

தகவல் : வி . அன்ரன் றெஜினோட், வவுனியா.



கடந்த 23-01-2011 அன்று வவுனியா தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்ரியார் ஆலய திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவிழா கூட்டுத்திருப்பலி பங்குத்தந்தையாயிருந்த அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை, உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. லக்ஸ்ரன் டீ சில்வா மற்றும் வவுனியா பங்கின் முதல் குருவும் மூத்த குருவுமாகிய அருட்பணி. J.B.தேவராஜா ஆகியோரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் திருச்சுரூப பவனி இடம் பெற்று திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. இடம் மாற்றலாகி சென்ற பங்குத்தந்தைக்கு பணிக்கான நன்றிகூறி பாராட்டுரைக்கும் நிகழ்வும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## கல்வாரி திருத்தலம் நோக்கி தவக்கால பாதயாத்திரை

கோமரசன்குளப் பங்கிலுள்ள கல்வாரி திருத்தலம் நோக்கி வருடா வருடம் மேற்கொள்ளப்படும் தவக்கால பாத யாத்திரை இம்முறை மார்ச் 30 - ஏப்ரல் 1 வரையிலான நாட்களில் இடம்பெறும். மார்ச் 30ம் திகதி புதன்கிழமை அதிகாலை மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்திலிருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமாகும். இவ்வருடம் இளைஞர்களுக்கான வருடம் என்பதால், பெருந்தொகையாக பாதயாத்திரையை மேற்கொள்ள காத்திருக்கும் பக்தர்களுடன் இளைஞர்கள்நீங்களும் இணைந்திடுவீர் கல்வாரி நோக்கிய பயணத்தில் புதிய இறைஅனுபவம் பெற புறப்படுங்கள். ஆன்மீக வாஞ்சையுடன் கால்நடையாக பயணமாக காத்திருப்பீர்.

இன்னுமாக ஏப்ரல் மாதத்தின் 2ம் வெள்ளி (08.04.2011) அன்று ஓலைத்தொடுவாய் கர்த்தர் திருத்தலம் நோக்கியும், 3ம் வெள்ளி (15.04.2011) அன்று பரப்புக்கடந்தான் கர்த்தர் திருத்தலம் நோக்கியும் பாதயாத்திரைகள் மேற்கொள்ளப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வில் எட்டு சமூகங்கள்

44வது கிறிஸ்தவ ஒன்றிப்பு வார செப வழிபாட்டினை தேசிய கிறிஸ்தவ சபையும் உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் ஒன்றிப்பிற்கும் உரையாடலுக்குமான ஆணைக்குழுவும் இணைந்து கொழும்பிலே ஏற்பாடு செய்தன. "திருத்தூதரின் படிப்பினைகளில், நட்புறவில், அப்பம் பிடுதலில், செபிப்பதில் ஒன்றித்திருத்தல் (தி.ப 2:42 - 47)" என்பதே இவ்வருட கிறிஸ்தவ ஒன்றிப்பு வார கருப்பொருளாக அமைந்தது. எட்டு கிறிஸ்தவ சமூகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வு கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த ஆலயத்தில் இடம் பெற்றது. செப வழிபாடு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் நடாத்தப்பட்டது. கொழும்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க பிரதிநிதிகளுடன் மெதடிஸ் திருச்சபை, பிரஸ்பேட்டரியம் திருச்சபை, பப்டிஸ் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, இலங்கை குருநாகல் திருச்சபை, டச்சு சீர்திருத்த திருச்சபை இரட்சணிய சேனை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## சிங்கள குருக்கள் தமிழ் மொழியை கற்க ஊக்குவிக்கும் சிலாப மறைமாவட்டம்



சிலாப மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை தனது மறைமாவட்டத்தின் சிங்கள குருமாணவர்களையும் குருக்களையும் தமிழ் மொழியை கற்க ஊக்குவிக்கிறார். இம்மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 50 சதவீதம், தமிழ் பேசும் மக்களாகவும் அவர்களில் கணிசமானவர்கள் கத்தோலிக்க தமிழ் பேசும் மக்களாகவும் இருப்பதால் தமிழ் மொழியை சரளமாக பேசும் குருக்கள் பலரின் தேவை அதிகமாக உள்ளது. "நான் இளம் குருக்களை திருமலை - மட்டு மறைமாவட்டத்தின் தமிழ் பங்குகளிலே பணியாற்ற அனுப்பி வைக்கிறேன்" என சிலாப ஆயர் தெரிவித்தார். ஆயர் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், "குருமடத்திலே வாரத்திற்கு ஒரு தடவை தமிழில் திருப்பலி ஒப்புக் கொடுக்க அறிவுறுத்தியுள்ளேன்" என கூறினார். நான்கு இளம் குருக்கள் அண்மையில் திருமலை மட்டு மறைமாவட்டத்தில் உதவி பங்குக் குருக்களாக பணியாற்ற அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். கிண்ணியா பங்கில் பணியாற்ற அனுப்பப்பட்டுள்ள அருட்பணி. அரோஸ் பிரியந்த கூறுகையில் "தமிழ் மக்கள் மத்தியில் பணியாற்ற தொடங்கிய பின் அவர்களின் மொழியில் பேசுவதன் முக்கியத்துவத்தை மிகவே உணர்ந்து கொண்டேன்" என்றார்.

## செய்தி ஊடகம் மீதான தாக்குதலுக்கு கத்தோலிக்க வார இதழ் கண்டனம்

கொழும்பு மாவட்டத்தின் மலபேயில் அமைந்துள்ள 'லங்கா - ஈ - நியூஸ்' இணையச் செய்தி ஊடக அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்ட தாக்குதலை, கருத்துத் தெரிவிப்பு சுதந்திரத்திற்கெதிரான அடக்கு முறை தாக்குதலென கூறி கத்தோலிக்க வார இதழ் உட்பட பல உள்ளூர் செய்தி ஊடகங்கள் கண்டித்துள்ளன. " நாம் இந்த செயலை வன்மையாக கண்டிக்கிறோம். உடனடி தகவல்களை மக்களுக்கு அறியச்செய்யும் விதமான கருத்து சுதந்திரம் நிலவ வேண்டும்" என சிங்கள வார கத்தோலிக்க இதழான "ஞானார்த்த பிரதீபய" (ஞான ஒளி) பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணி சாகர கெட்டியாராச்சி தெரிவித்தார்.

## தேவன்பிட்டி பங்கு நிகழ்வுகள்

*தகவல் : லூர்து நாயகி, மறையாசிரியர், தேவன்பிட்டி.*

**இளைஞர் கருத்தமர்வு:** தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் இளையோருக்கான கருத்தமர்வு 20.01.2011 அன்று வாழ்வுதய அனுசரணையில் இடம் பெற்றது. வாழ்வுதய பணியாளர் திரு.சஞ்ஜீவன், திருமதி.பிறகிற் ஆகியோர் இக்கருத்தமர்வின் வளவாளராக செயற்பட்டனர். 'தலைமைத்துவம்' மற்றும் 'உளவியல்' சார்ந்த கருத்துரைகள் வழங்கப்பட்ட இக்கருத்தமர்வில் பங்கிலிருந்து 35 இளையோர்கள் பங்குபற்றினர்.

**திருப்பாலத்துவ சபை நிகழ்வு:** திருப்பாலத்துவ சபை ஞாயிறு பங்கில் 30.01.2011 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வு பங்குத்தந்தை, அருட்சகோதரி ஆகியோரின் வழிகாட்டலிலும் ஊக்குவிப்பாளர் திருமதி. ர. அருள்மேரி, கு. அற்புதவதனி, பா. ஜெயராதா ஆகியோரின் ஒத்துழைப்பிலும் இனிதே நடந்தேறியது.

**அர்ப்பண நன்றித்திருப்பலி:** செபமாலை தாசர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரிய கத்தறின் அவர்களின் அர்ப்பண நன்றித்திருப்பலி 30.01.2011 அன்று ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவர் தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தைச் சேர்ந்த திரு.திருமதி ஆரோக்கியநாதன் காணிக்கை தம்பதியரின் மகளாவார். திருப்பலி நிறைவில் வாழ்த்துரைக்கும் நிகழ்வு இடம்பெற்று அருட்சகோதரிக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. பங்குத்தந்தையின் ஒழுங்கமைப்பில் ஆலய மேய்ப்புப்பணிச்சபையின் முன்னெடுப்பில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

## மன்னார் மறைமாவட்ட குருக்களின் வருடாந்த ஞான ஒடுக்கம்

மருதமடு திருத்தலத்திலே மன்னார் மறைமாவட்ட குருக்கள் அனைவருக்கும் கடந்த 20 - 25, பெப்ரவரி 2011 காலப்பகுதியில் வருடாந்த ஞான ஒடுக்கம் நன்கே நடந்து முடிந்தது. ஞான ஒடுக்கத்தின் தியான உரைகளை அமலமரித்தியாகிகளின் கொழும்பு மாகாணக்குரு அருட்பணி. ஜெராட் றொசாய்ரோ அ.ம.தி அவர்கள் வழங்கினார். மருதமடுதிருத் தாயாரின் பதியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் உட்பட குருக்கள் அனைவரும் ஈடுபாட்டோடு இதில் பங்கெடுத்தனர்.

## தவக்காலத் தியானங்கள்

மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள் உட்பட பல்வேறு கத்தோலிக்க அமைப்புகளுக்கு வருடாவருடம் எமது மறைமாவட்டத்தில் நடாத்தப்படும் தவக்கால தியானங்கள் இம்முறையும் சிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக மறைமாவட்ட மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர் மற்றும் இளையோருக்கான தவக்காலத் தியானங்கள் தமிழ் நாட்டின் புதுவாழ்வு தியான செபக்குழு உறுப்பினரை வளவாளர்களாகக் கொண்டு ஏப்ரல் மாதத்தின் முதல் வாரங்களில் மருதமடு திருத்தலத்தில் நடாத்தப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை மறைமாவட்ட மேய்ப்புப் பணித்திட்ட செயலாளரும் மறைக்கல்வி இயக்குனருமாகிய அருட்பணி. ம.ஜெயபாலன் அடிகளார் மேற்கொள்கின்றார்.

# உலகத்திருச்சபை செய்திகள்

## ஈராக்கில் 40,000 இருந்து 50 ஆகக் குறைந்த கிறிஸ்தவக்குடும்பங்கள்

ஈராக்கில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராய் இருப்பதால் அவர்கள் தாக்கப்படுவதாகவும், உலக அரசுகள் ஒன்று திரண்டு உதவினால் மட்டுமே இப்பகுதியில் அமைதியும் உறுதியான நிலையும் ஏற்படும் எனவும் அந்நாட்டு ஆயர்கள் கூறினர். 2003, 2004ம் ஆண்டுகளில் பாக்தாத் நகரில் 40,000 கிறிஸ்தவக் குடும்பங்கள் இருந்தன. ஆனால் அங்கு இப்போது 50 கிறிஸ்தவக் குடும்பங்களே உள்ளன.

பாக்ஸ் கிறிஸ்டி அமைப்பின் 2010ம் ஆண்டுக்கான அகில உலக அமைதி விருது ஈராக்கின் கிர்குக் கல்தேய ரீதிப் பேராயர் லூயிஸ் சாகோவுக்கு வழங்கப்பட்டது.

## இறை நிந்தனைச் சட்டமாற்றம் ஆயர் எதிர்ப்பு

கிறிஸ்தவ மதத்தைக் குறித்து அவதூறாகப் பேசுபவர்களும் இறைநிந்தனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள் என்ற பாகிஸ்தான் அரசின் சட்டத்திருத்தப் பரிந்துரைக்கு அந்நாட்டின் லாகூர் ஆங்கிலிக்கன் ஆயர் அலெக்சாண்டர் ஜான்மாலிக் தன் எதிர்ப்பை வெளியிட்டார். இயேசுவின் நன்மதிப்பைக் காப்பாற்ற இவ்வுலகச் சட்டங்கள் தேவையில்லை. சட்டம் மூலமே கடவுளைக் காப்பாற்ற முடியும் என்ற எண்ணப் போக்கு தீவிரவாதிகளுக்கே உதவுவதாக இருக்கும். இறைநிந்தனை தண்டனைச் சட்டத்தை மாற்றாமல், இத்தகைய மாற்றங்கள் மூலம் கிறிஸ்தவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்பது மட்டுமல்ல, மேலும் கொடிய தண்டனைகளுக்கே இது வழிவகுக்கும் என்ற கவலையையும் அவர் வெளியிட்டார்.

## ஆர்த்தடாக்ஸ் சபைக்கு கத்தோலிக்க திருச்சபையின் பரிசு

திருச்சபை பிளவு படுவதற்கு முன் வாழ்ந்த புனிதர்களான திருமுழுக்கு யோவான், அன்னம்மாள், அப்போஸ்தலரான பர்த்தலேமேயு, மறைசாட்சியான ஸ்டீபன், லாரன்ஸ் என எட்டுப் புனிதர்களின் திருப்பண்டங்கள், கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசாக. தற்போது இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

## தென்கொரிய மறைப்பணியாளருக்குப் பாராட்டு

ஆபிரிக்க நாடான சூடானில் மறைபணியாற்றி,2010ம் ஆண்டு ஜனவரியில் இறையடி சேர்ந்த 48 வயதான ஜான் லீ தே - சுக் எனும் சலேசிய அருட்தந்தையின் வாழ்வு பற்றிய 'சூடானே, எனக்காக அழாதே' என்ற திரைப்படத்தைத் தென்கொரியாவில் 120,000க்கும் மேற்பட்டோர் பார்த்திருக்கின்றனர்.

## நம்பிக்கையின் முதற்கனி செபமாகும் - பேராயர் வின்சென்ட் நிக்கோல்ஸ்

கத்தோலிக்கர்களின் நம்பிக்கை அவர்களின் அன்றாட வாழ்வில் காணக்கூடியதாக இருக்க வேண்டும் என இலண்டனின் வெஸ்ட்மினிஸ்டர் பேராயர் வின்சென்ட் நிக்கோல்ஸ் அழைப்பு விடுத்துள்ளார். நம்பிக்கை என்பது நம் வாழ்வில் காணக் கூடியதாக இருக்க வேண்டுமெனில், நம்பிக்கையின் முதற்கனியாகிய செபத்திற்கு நம் வாழ்வில் அதற்குரிய இடத்தைக் கொடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுதரும் வார்த்தை

## குற்றவாளிக் கூண்டில்

அருட்கலாநிதி.அ. பீட்டர் அபீர்

ஏழைகளின் தோழர், பாவிகளின் நண்பர் நாசரேத்தூர் நாயகன் இயேசு சென்றவிடமெங்கும் நற்செய்தியையும், உரிமை வாழ்வையும் போதித்தார், நலமளிக்கும் நற்செயல்கள் பல ஆற்றினார் (மாற்கு 1:39). அவரது அருமை பெருமைகளை உணர்ந்த மக்கள் அவரை, "ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக!" என்று மிகுந்த ஆரவாரத்துடன் எருசலேமுக்குள் வரவேற்றனர் என்று எல்லா நற்செய்தியாளர்களுமே சான்று பகர்கின்றனர் (மாற்கு 11:1-11; மத். 21:1-11; லூக் 19:28-40; யோவான் 12:12-19). இருப்பினும் இவரை இறுதியில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திப் பார்த்தது அன்றைய யூதச் சமுதாயம்.

### சதியின் மர்மம் என்ன?

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவை தொலைத்துக்கட்ட பல முறை வழிதேடினர் (மாற் 14:1-2; மத். 26:3-8; லூக். 22:2). "இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது" என்று அவர்களது சதித்திட்டத்தை நியாயப்படுத்தினர் (யோவான் 11:50). இதன் விளைவாக, பிலாத்து என்ற உரோமை ஆளுநன் முன்பாக ஓர் அரசியல் கைதியாக நிறுத்தப்பட்டு, அவர்மேல் மூன்று விதக் குற்றச்சாட்டுக்களை அன்றைய யூதத் தலைவர்கள் அவருக்கு எதிராகத் தொடுத்தனர் (லூக் 23:1-2).

(1) "மக்கள் சீரழியக் காரணமாயிருந்தான்"
(2) "சீசருக்குக் கப்பம் கட்டக்கூடாது என்கிறான்"
(3) "தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக்கொள்கிறான்"

இம் மூன்றுமே அரசியல் சாயமுடைய குற்றச்சாட்டுக்கள். அதனால்தான் அவரது வழக்கை பிலாத்து விசாரித்து, சீசரின் ஆட்சிக்கு ஆபத்து என்றும், ஏரோது அரியணையின் வாரிசு என்றும் தவறாகக் கணிக்கப்பட்டு, ஓர் அரசியல் குற்றவாளியாகச் சிலுவை மரணத்தைப் பெறுகிறார் இயேசு.

யூதத் தலைவர்கள் பிலாத்துவின் அதிகாரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, இயேசுவைத் தொலைத்துக்கட்ட, இயேசுவின் செயல்பாடுகளுக்கு அரசியல் சாயம் பூசினர். இருப்பினும் "சீசருக்கு உரியதைச் சீசருக்கும், கடவுளுககுரியதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்ற அளவில் (லூக் 20:25) இயேசு கிறிஸ்து அரசியலில் ஈடுபட்டதுமில்லை; உரோமையருடன் மோதவும் இல்லை. ஆனால் இயேசு "சமூக யதார்த்தவாதியாகவும், ஓர் ஆன்மீகவாதியாகவும்" செயல்பட்டதை சுயநலவாதிகளான யூதத் தலைவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

பிலாத்து விசாரணையின்போது, "அவனைச் சிலுவையில் அறையும்" என்று மக்கட்கூட்டம் கத்தினாலும் (மாற்கு 15:13) பொதுவாக இவர்கள் இயேசுவை ஆதரித்தனர். தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞருமே இயேசுவை ஒழித்துவிட வழி தேடினர் என்று தெரிகிறது (லூக். 19:47-48).

இதற்கு அடிப்படைக் காரணம் இயேசு இவர்களின் வெளிவேடத்தையும், சமய, சமூக அநீதிகளையும் எடுத்துரைத்து, அவர்களது உண்மை நிலையை மக்களுக்குப் படம்பிடித்துக் காட்டினார் (மத். 23). யூதர்கள் அதிகம் போற்றிய ஓய்வுநாள் சட்டத்தின் வெற்றுச் சடங்கு முறைகளைப் புறக்கணித்து, "ஓய்வுநாள் இருப்பது மனிதருக்காக; மனிதர் ஓய்வுநாளுக்காக அல்ல" என்ற இயேசுவின் சமய, சமூக யதார்த்தத்தை (மாற்கு 2:27) அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. "மனம் மாறாவிட்டால் நீங்கள் யாவரும் அழிவீர்கள்" என்ற அவரது தீவிரப் போதனை (லூக் 13:3,5) அவர்களுக்குக் கசப்பு மருந்தாக இருந்தது. "எருசலேமைப் படைகள் சூழ்ந்துவிடும்" என்ற அவரது இறைவாக்குப் போதனை (லூக்கா 21:20) இயேசு ஒரு தீவிரவாதி என்ற பெயரைத் தந்தது. "உரோமையர்கள் என்ற யூதர்களின் பகைவர்களின் கையினின்று நாம் மீட்கப்படுவோம்" என்ற யூத நம்பிக்கையையோ (லூக் 1:71,74) தீவிரவாதிகள் எதிர்பாத்திருந்த விதத்திலோ இயேசு யூதருக்காகப் போராடவில்லை.

"மனம் மாறுங்கள்; விண்ணரசு நெருங்கிவிட்டது" என்ற ஆன்மீகப் போதனையே அவரிடம் மேலோங்கி நின்றது. அதனால் அவருக்கெதிராக யூதத் தலைவர்களின் எதிர்ப்பு அதிகரித்த போது, இறுதியில் மக்கட் கூட்டம் கூட அடங்கிவிட்டது. அவர் இறந்து விடுவதில் யாருக்கும் நஷ்டமில்லை. மாறாக லாபமே உண்டு என்ற நிலை உருவாக்கப்பட்டது. எனவே யூதச் சமூகத்தின் அங்கீகாரம் பெறத் தலைமைச் சங்கத்தின் முன்னிலையிலும் (மாற்கு 14:53-64), உரோமை அனுமதிக்காக பிலாத்து முன்னிலையிலும் (மாற்கு 15:1-15) விசாரிக்கப்பட்டு "இயேசு சாக வேண்டும்" என்று முடிவு செய்யப்படுகிறது (மாற்கு 14: 64, 15:15). இருப்பினும், இயேசு குற்றமற்றவர் என்பதைப் பிலாத்து நன்கு உணர்ந்தான் என்றும் இயேசுவுக்கு எதிராக யூதர்களின் பகைமையை அதிகரித்தும் மாற்கும் மத்தேயுவும் (மாற்கு 15:11; மத். 27:25) காட்டுவது குறிப்பிடத்தக்கது. இது அவர்களது காலத்துத் திருச்சபையின் வாழ்வை வெளிப்படுத்துகிறது.

### துன்புறும் திருச்சபை

இயேசு தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவான் 1:11). இந்நிலை அவருக்கு மட்டுமல்ல, அவரை ஏற்றுக் கொண்ட இளந்திருச்சபையிலும் தொடர்ந்தது. "என்



பெயரின் பொருட்டு எல்லா மக்கள் இனத்தாரும் உங்களை வெறுப்பர்" என்று இயேசுவே முன்னறிவித்தது போல் (மத் 24:9; யோவான் 15:20) திருத்தூதர்களின் காலத்திருச்சபை எதிர்க்கப்படும் அடையாளமாக இருந்ததைத் திருவெளிப்பாடு என்ற நூல் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது (2:13; 4:18; 5:18). திருச்சபையையே ஒழிக்கத் தேடிய பவுலின் ஆரம்ப காலத் தீவிரத்தன்மை (தி.ப. 9:22; கலா. 1:13) இங்கே குறிப்பிடத்தக்கது. "நான் எபேசில் இருந்தபோது கொடிய விலங்குகளோடு போராடினேன்" என்ற அதே பவுலின் வார்த்தைகள் கிறிஸ்தவர்கள் எப்படி ஒரு துன்புறும் திருச்சபையாக இருந்தது என்பதற்குத் தெளிவான சான்றாகும் (1கொரி. 15:32).

கி.பி 45 வரை பாலஸ்தீனப் பின்னணியிலேயே பரவிய திருச்சபை புனித பவுலின் வரவுக்குப் பின் உரோமை ஆட்சிக்கு உட்பட்ட எல்லா மாநிலங்களிலும் பரவியது. இத்துடன், அதற்கான போராட்டங்களும் அதிகரித்தன. யூதர் எதிர்ப்பு, புறவினத்தார் புறக்கணிப்பு, பேரரசர் வழிபாடு என்று பல நிலைகளிலும் அன்றைய (கி.பி. 50க்குப் பிறகு) கிறிஸ்தவர் நெருக்கப்பட்டனர். கி.பி. 62க்குப் பிறகு நீரோவின் ஆட்சியில் கிறிஸ்தவரின் நிலை படு மோசமாக மாறியது. அவர்களது வாழ்வே கேள்விக் குறியாக காணப்பட்டது. கி.பி 70ல் எழுந்த யூதப் புரட்சியும், அதனைத் தொடர்ந்து வந்த எருசலேம் அழிவும் கிறிஸ்தவ வாழ்வை பெரும் சோதனை, வேதனைகளுக்கு உட்படுத்தின. இத்தருணத்தில் எழுதிய மாற்குவும் (கி.பி65) மத்தேயுவும் (கி.பி 75) இத்தகைய திருச்சபையின் வேதனைகள் இயேசுவின் பாடுகளில் பிரதிபலிக்கும் வகையில் அவரைத் துன்புறும் ஊழியராக வெளிப்படுத்தினர்.

### துன்புறும் ஊழியன்

நீதிமான் துன்புறுத்தப்பட்டு வேதனைக்குட் படுத்தப்படுகின்றான் என்ற பொதுவான போதனையை நாம் பழைய ஏற்பாட்டில் காண்கின்றோம். (தொ.நூ-37:39-41; தானி. 3:6; 2 மக்க 7). இத்தகைய பின்னணியில், "ஒரு மீட்பரே துன்பத்திற்கு உட்படுத்தப்படுகிறார்" என்ற வித்தியாசமான கண்ணோட்டத்தில் இயேசுவின் பாடுகளைப்பற்றி மத்தேயுவும் மாற்கும் தருகின்றனர் (மாற்கு 14:18; 15: 24). "அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்..." என்று துன்புறும் ஊழியன் பற்றி இறைவாக்கினர் எசாயாவின் கூற்று முழுமையையும் (எசா.53:2-11) இயேசுவில் கண்டனர். அவரது சீடர் ஒருவர் காட்டிக் கொடுக்கிறார்; மற்றொருவர் மறுதலிக்கிறார்; மற்ற யாவரும்விலகி ஓடிவிடுகின்றனர். "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" என்றும் (மாற்கு 14:34) "இத்துன்பக்கலத்தை என்னிடமிருந்து அகற்றும்" என்றும் (வச36) அவரே கூறுமளவிற்கு அவரது துன்பத்தின் உக்கிரம் அதிகரித்தது. "பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க முடியவில்லை" என்ற இழிச்சொல்லுக்கு ஆளான பாடுகளின் இயேசு (மாற்கு 15:31), "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று செபிக்கும் அளவுக்குத் துன்பத்தின் இறுதி எல்லைக்கே இழுத்துச் செல்லப்பட்டார் (15:34).

இத்தகைய அவரது துன்பப் போராட்டத்தை வானகத் தந்தை அவரிடமிருந்து உடனே எடுத்துவிடவில்லை. மாறாக, இத்தகைய வேதனைகளைத் தாங்கிக் கொள்ளும் மனவலிமையைத் தருகிறார் (மாற்கு 14:42).

உலகினரால் புறக்கணிக்கப்பட்டு, துன்ப துயரங்களுக்குட்படுத்தப்படும் திருச்சபையின் வேதனை அனுபவமானது (மத். 5:11). இயேசு தனது வாழ்வில் அனுபவித்த போராட்டங்களின் பிரதிபலிப்புத்தான்; கடவுளால் கூட கைவிடப்பட்டு விட்டோமே என்ற அவலநிலைக்கு உட்படுத்தப்படும் நம்பிக்கையுள்ள கிறிஸ்தவரின் அனுபவத்தை அன்றே இயேசு தன் வாழ்வில் ஏற்றார் (எசா. 37:3; தி.பா.89: 51 - 52). அதனால், துன்புறும் திருச்சபைக்கு நம்பிக்கைத் திலகமாகத் திகழ்கிறார். இந்த உலகத்தாலும் கடவுளாலும் கூட "புறக்கணிக்கப்பட்ட" நாசரேத்தூர் நாயகன் தனது வேதனையிலும் வீரத்தைக் காட்டியதால், "இம் மனிதர் உண்மையில் கடவுளின் மகன்" என்று போற்றப்பட்டார் (மாற்கு 15:39).

அதனால்தான், "இறக்கும் வரை நம்பிக்கையோடு இரு. அவ்வாறாயின் வாழ்வை உனக்கு முடியாகச் சூட்டுவேன்" என்று நம்மைப் பார்த்து அவரால் கூறமுடிந்தது (தி.வெ.2:10).

### 1ம் பக்கத் தொடர்ச்சி..........

1ம் பக்கத் தொடர்ச்சி..........

### வரலாற்றுப் பெருமை மிகு..........

மாந்தை மண்ணின் தொன்மை மிகு சிறப்பையும் லூர்து அன்னை திருத்தலத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து பிரான்சு தேசத்தின் லூர்து நகரில் பெர்னடேற் எனும் சிறுமிக்கு அன்னை மரி கொடுத்த தரிசனத்தின் நிகழ்வுகளை இறையியல் கண்ணோட்டத்தில் எடுத்துரைத்து குருமுதல்வர் அவர்கள் மறையுரையாற்றினார். திருவிழா திருவழிபாட்டினை மாந்தை வாழ் இறைமக்கள் சிறப்பித்திருந்தனர். ஈற்றில் முன்னாள் குருமுதல்வரும் தற்போதைய குருமட அதிபருமாகிய அருட்பணி. சேவியர் குருஸ் அடிகளாரினால் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. பல்வேறு பங்குகளிலிருந்து பெருந்தொகையான இறைமக்கள் அன்னையின் பதியில் குடும்ப உணர்வில் குழுமி வந்திருந்தனர்.

# புனிதரின் பாதையில்

மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

## எருசலேம் நகர் புனித சிரில்

### ஆயர், மறைவல்லுநர் - (கி.பி.315 - 386)

பங்குனி 18

எருசலேம் நகரின் ஆயராகப் பணியாற்றிய நாட்களில் சிரில் மும்முறை நாடு கடத்தப்பட்டார். ஆரியப் பதிதத்தைப் பூண்டோடு ஒழிக்கும் திட்டத்தில் புனித அத்தனாசியாருடன் இவர் ஒத்துழைத்தார். இவர் எழுதி வைத்துச் சென்ற திருமறை விளக்கம் இன்று வரை திருச்சபைக்கு விலைமதிக்கப்படாத செல்வமாகத் திகழ்கிறது. இவரது நூல்களுள் 10 விளக்க நூல்கள் தவக்காலத்தில் திருமுழுக்குக்குத் தயாரிக்கப்படுவோருக்காக எழுதப்பட்டவை. எஞ்சியுள்ளவை உயிர்த்த விழாவிற்குப் பிறகு புதிதாக நீராட்டுப் பெற்றவர்களை உறுதிப்படுத்தும் முறையில் அமைந்துள்ளன. நமது ஞான வாழ்வுக்கு மையமாக விளங்கும் நற்கருணையைப் பற்றி இவர்தரும் போதனையில் இவருக்கு நிகர் இவரே. இன்று இரண்டாம் வத்.சங்கத்தின் எதிரொலியாக, திருச்சபையில் பல நாடுகளிலும், திவ்ய நற்கருணையைப விசுவாசிகள் தங்கள் கைகளில் பெற்றுப் பக்தியுடன் உட்கொள்ளும் வழக்கம் பரவி வருகிறது. சங்கம் இதனை ஏற்கிறது. ஆனால், என்னே வியப்பு! புனித சிரில், தமது காலத்திலேயே இதனை பற்றி மிக அழகாகக் கூறிச் சென்றுள்ளார்.

"திருவிருந்தில் பங்கு பெறச்செல்கின்றாயா? கையை வீசிக் கொண்டோ, தொங்கப்போட்டு ஆட்டிக்கொண்டோ செல்லாதே. மாறாக, அரசர்களை ஏற்றிவரும் தேர்போல, உன் இடக்கை வலக்கையைத் தாங்கும் தேராக அமையட்டும். பின்னர் திருவுடலை நீ பற்றுறுதியுடன் பார்ப்பதனால், உன் கண்கள் தூய்மை அடையட்டும். பிறகே நீ அதனை உட்கொள்ளலாம். இவ்வேளையில் ஒரு கடுகு அளவுத் துண்டு கூடவிழாது பார்த்துக் கொள். அப்படியே நீ இழக்க நேரிட்டால், உனது உடலில் ஒருபகுதியையே இழந்ததாக நினைத்துக் கொள். யாராகிலும் ஒருவர் தங்கத்துாள்களை உன் கையில் ஒப்படைக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் எதையும் இழக்காதிருக்கவும் [illegible] பத்திரப்படுத்தவும்



எத்துணை முயற்சி எடுத்துக் கொள்வாய்? பொன்னை விட பன்மடங்கு விலைமதிப்புள்ளதை நீ இழக்கலாமா? "இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்களை மனதிலிருத்து. யாருடைய குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதே. திருப்பந்தியை விட்டு ஒதுங்கிவிடாதே. உனது பாவத்தின் காரணமாக, இத்தகைய புனிதமான மறை பொருளைக் கறைப்படுத்தாதே".

எருசலேமின் ஆயராக நியமனம் பெற்ற மறுஆண்டில் மிகப்பெரிய சிலுவை, ஒளிமயமாய் விண்ணில் காணப்பட்டுக் கல்வாரி மலையின் மேல் இறங்கி, இன்னும் மிக ஒளிமயமாகப் பலமணிநேரம் ஒளிர்ந்ததை இவரும் எருசலேம் மக்களும் கண்டு வியந்தார்கள். இக்காட்சிக்குப் பின் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டனர். இயேசுவை அறியாத பலர் மெய்மறையில் வந்து சேர்ந்தனர்.

உரோமைப் பேரரசனும் நமது மறையின் பகைவனுமான ஜூலியன், இப் புதுமையைக் கேட்டு வெறிபிடித்தவன் போல் சத்திய வேதத்தை ஒழித்து அழிக்கும் கருத்துடன் யூதர்களையும், புத்தர்களையும் தூண்டிவிட்டான். யூதர்களின் பழைய ஆலயத்தை புதுப்பிக்க ஏராளமான பொருளுதவி கொடுத்தான். ஆனால் சிரில் இதைக் கண்டு நகைத்தார். ஆண்டவரின் உறுதி மொழி நிறைவேறும் என்று விசுவசித்தார். அவ்வண்ணமே ஆயிரக்கணக்கான யூதர் வேலை செய்து கொண்டிருந்தபோது, அடித்தளத்தின் மீது புறப்பட்ட நெருப்பாலும், நிலநடுக்கத்தாலும், பலர் மாண்டதைக் கண்டு அரசரும் மற்றவர்களும் நாணி உடனே வேலையை விட்டு விலகினர்.

### செயல்பாட்டிற்கு

நாம் அன்னை திருச்சபையின் போதனையைத் தளராத விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா


# இன்றைய தமிழ் இலக்கியங்களை சர்வதேசமயப்படுத்த வேண்டும்

## சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில்

## தமிழ் நேசன் அடிகளா






உலக இலக்கிய அரங்கிலே இன்றைய தமிழ் இலக்கியங்களின் இடம் என்ன? என்ற கேள்வி முக்கியமானது. உலக மொழிகளின் வரிசையில் இன்று தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றுள்ளது. பல்வேறு நாட்டு எழுத்தாளர்களுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆண்டுதோறும் கிடைத்துவரும் நிலையில் தமிழ் இலக்கியத்திற்கு ஏன் இதுவரை நோபல் பரிசு கிடைக்கவில்லை? என்ற கேள்வியும் இங்கு முக்கியமானது. இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை நாம் இன்னும் சர்வதேசத்தின் பார்வைக்கு வைக்கவில்லை. இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை நாம் இன்னும் சர்வதேசமயப்படுத்தவில்லை. எனவே இந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு அதற்கான உந்துதலை, ஏதுநிலையை ஏற்படுத்த வேண்டும் என அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 6ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வின்போது ஆறுமுகநாவலர் அரங்கில் 'உலகத் தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் இடம்பெற்ற ஆய்வரங்கிற்கு இணைத் தலைவராகக் கலந்துகொண்டு ஆரம்ப உரை நிகழ்த்தும்போதே தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: தமிழை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசென்ற முயற்சியில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் பங்களிப்பு காத்திரமானது. சமயப் பணிபுரிவதற்காக கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் தமிழ் மண்ணிற்கு வந்தபோது சமய நோக்கங்களுக்காகவே தமிழை அவர்கள் படிக்க ஆரம்பித்தனர். தமிழை அவர்கள் கற்க ஆரம்பித்தபோது தமிழின் அழகிலும் ஆழத்திலும் அவர்கள் தம்மைப் பறிகொடுத்தனர். அவர்களில் சிலர் வந்த வேலையை விட்டுவிட்டு தமிழை ஆழமாகக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றனர். தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட தமிழின் சில இலக்கியங்களை மேலைத்தேச மொழிகளில் மொழிபெயர்த்தனர். தமிழ் மொழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர். இதன் வாயிலாக மேலைநாட்டவர்கள் தமிழின் தொன்மையை அதன் மேன்மையை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. சர்வதேச இலக்கியத் தளத்தில் தமிழ் மொழியின் சிறப்பு உணரப்பட்டது. தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றவர்களில் மிகவும் முக்கியமானவர். தமிழ் இலக்கியங்களின் பழமையையும் வளமையையும் செழுமையையும் பல்வேறு நாடுகளின் உலகப் பல்கலைக்கழகங்களில் அவர் எடுத்து விளக்கினார். பன்மொழிப் பாண்டித்தியம் பெற்ற அவர் ஒவ்வொரு நாட்டிற்கும் சென்றபோது அந்தந்த நாட்டு மொழியில் தமிழ் இலக்கியங்களையும் தமிழின் பண்பாட்டுப் பெருமைகளையும் எடுத்துக் கூறினார்.

தமிழ்நாட்டின் எங்கோ ஓர் மூலையில், ஒரு குக்கிராமத்தில் இருந்துகொண்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - அதாவது "எல்லா ஊரும் என்னுடைய ஊரே, எல்லா மக்களும் என்னுடைய உறவினரே" என்று கூறிய சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் உலகளாவிய சகோதரத்துவ வார்த்தைகளை தனிநாயகம் அடிகளார் உலக அரங்கில் அந்தந்த நாட்டு மொழிகளில் பெயர்த்துச் சொன்னபோது மேலை நாட்டவர்களின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் உலகளாவிய ரீதியில் சிந்தித்தானா? என்று வியந்து நின்றனர். தமிழின் செம்மொழித் தகுதியை உலகம் ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதற்கு தனிநாயகம் அடிகள் போன்ற பன்மொழி தமிழ் அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களை சர்வதேச அரங்கின் பார்வைக்கு முன்வைத்தமையும் முக்கிய காரணமாகும். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் பெருமையில்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவு நனவாகும்போதுதான் உலக அரங்கில் தமிழ் இலக்கியங்கள் கவனத்தைப் பெறுகின்ற நிலை உருவாகும். இந்தியாவின் வங்கக் கவிஞர் ரவீத்திரநாத் தாகூர் வங்க மொழியிலேயே எழுதிக்கொண்டிருக்கும்வரை அவருடைய எழுத்துக்கள் உலகத்தின் கவனத்தைப் பெறவில்லை. எப்பொழுது அவர் தனது கீதாஞ்சலி என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டாரோ அப்போதுதான் அவருடைய இலக்கியங்கள் உலகின் கவனத்தை ஈர்த்தது. பல ஆங்கிலக் கவிஞர்களின் பார்வை அவர்பால் திரும்பியது. அவருக்கு நோபல் பரிசு கிடைக்கின்ற ஏதுநிலை தோன்றியது.

இன்று படைக்கப்படுகின்ற தமிழ் இலக்கியங்கள் உலகத்தின் கவனத்தைப் பெறவேண்டுமெனில் அவை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். ஆங்கிலம் மற்றும் ஏனைய முக்கிய ஐரோப்பிய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்படவேண்டும். இதை இன்று யார் செய்வது? என்ற கேள்வி எழுவது இயல்பானது. அன்று கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் செய்ததை, அண்மைக் காலகட்டத்தில் தனிநாயகம் அடிகள் போன்ற பன்மொழி அறிஞர்கள் செய்ததை இன்று செய்யக்கூடியவர்கள் யார் என்றால் அவர்கள்தான் இன்றைய புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய தமிழர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இன்று தாம் வாழும் நாடுகளின் மொழிகளில் கல்வி பயின்று அம்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ளனர். தமிழையும் நன்கு கற்றிருக்கக்கூடிய இந்த இளம் சந்ததியினரே இதைச் செய்ய வேண்டும். அதாவது இவர்கள் இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து தமிழ் இலக்கியங்களின் ஆழத்தையும் அகலத்தையும் உலக அரங்கில் முன்னிலைப்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழ் இலக்கியத்திற்கும் நோபல் பரிசு கிடைக்கின்ற காலம் கனியும்.

## நீத்தார் நினைவு

| 8ம் ஆண்டு நினைவஞ்சலி | 9ம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|



| பிரான்சிஸ் றொட்றிகோ | அக்னஸ் றொட்றிகோ |
|---|---|

உதிர்வு

| 19-04-2003 | 14-03-2002 |
|---|---|

பாசத்துடன் எம்மை வளர்த்தீர்கள்
பாரினில் உம் புகழ் ஓங்கிடச் செய்தீர்கள்
சீவியத்திலும் உங்களை நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்.

உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வெளிவந்துவந்துவிட்டது!

### அருட்பணி . அ. பிலிப் I.V.Dei அடிகளாரின்

### "வளர்ந்தோர் மறைவாழ்வு" நூல்

சாதாரண மக்கள் இறைவன் மட்டிலுள்ள விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கின்றார்கள் என்பது உண்மை. இருந்தாலும் இவர்கள் இவ்விசுவாசத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் வளர்ந்தோரின் மறைவாழ்வுக்கான நூலொன்று அவசியம் தேவையாக இருக்கின்றது.

ஒட்டுமொத்தமான விசுவாச வாழ்வைக் **கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church)** விளக்கித் தருகிறது. இது கத்தோலிக்க திருச்சபையின் பொருளாழம் நிறைந்த விசுவாசச் சொத்து. இம்மாபெரும் ஞானச் செல்வத்தை இரத்தினச் சுருக்கமாக்கி சாதாரண பாமரமக்களுக்குக் கொண்டு செல்லும் முயற்சியே **வளர்ந்தோர் மறைவாழ்வு** எனும் இந்நூல். இலங்கையிலுள்ள எல்லா தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களிடமும் இது போய்ச் சேரவேண்டும்.

**இந்நூலைப்பற்றிய (அருட்பணி. ச.வி.ப மங்களராஜா ........ குருத்துவக்கல்வி பேராசிரியர் - யாழ்ப்பாணம்)** கருத்துரை

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி** என்னும் புதிய மறைக்கல்வி நூலிலுள்ள விடயங்கள் எல்லாம் சுருக்கமாக, எளிய நடையில், எல்லோரும் சிரமமில்லாமல் புரிந்து கொள்ளும் விதத்தில், இந்நூலில் எழுதப்பட்டுள்ளன. சாதாரணமாக ஒருவர் ஆசிரியர் ஒருவரின் உதவியில்லாமல் ஆறுதலாக வாசித்து விளங்கி கொள்ளக்கூடிய விதத்தில் இவை விளக்கப்பட்டுள்ளன. மறையாசிரியர்களுக்கு இது ஒரு சிறந்த கைநூலாகவும் இருக்கிறது.

**இந்நூல் கிடைக்குமிடம் :**
**கொழும்பு கத்தோலிக்க அச்சகம்**
இல. 2, ஞானார்த்த பிரதீபய மாவத்தை,
பொரளை, கொழும்பு - 8.
தொ.பேசி. 2695984, 2678106, 4614927


**பிரதி ஒன்றின் விலை : ரூபா.150.00**

## வெள்ளப் பெருக்கின் பதிவுகள் சில









## மாந்தை லூர்து அன்னை திருவிழா நிகழ்வுகளின் நிழற்படங்கள் சில






இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org